
www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

# பாரதியின்



# கனவு மெய்ப்பட வேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

# கனவு மெய்ப்படவேண்டும்

## கவிதைத் தொகுதி

## - பாரதி -

வெளியீடு:
வரையறுக்கப்பட்ட ‘சிந்தனை வட்டம்’
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா.
தொலைபேசி 0094-81-2493746
தொலைநகல் 0094-81-2497246

சிந்தனை வட்டத்தின் 249வது வெளியீடு’

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

## கனவு மெய்ப்படவேண்டும்

நூலாசிரியை : சக்திதேவி சத்தியநாதன் (பாரதி)
பதிப்பு : 1ம் பதிப்பு - ஏப்ரல் 2007
வெளியீடு : **சிந்தனை வட்டம்.**
14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா.

ISBN; 978-955-8913-73-4
பக்கங்கள் : 83

**Kanavu Maippadavendum**

Subject : Collection of Tamil Poems

Author : **SAKTHIDEVI SATHIANATHAN (Baarathy)**
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige, Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition April 2007
Language : Tamil
ISBN : 978-955-8913-73-4
Pages : 83

**© SAKTHIDEVI SATHIANATHAN 2007**
All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.



## சமர்ப்பணம்!

மண்ணில் என்னை உருவாக்கி
மனிதம் உணரச் செய்தவரே!
இரு கண்ணுள் என்னை வளர்த்தவரே!
காணிக்கையாக்குகின்றேன் என் தமிழை!

உணவை ஊட்டி ஊட்டி வளர்த்தீர்கள்!
ஒருவாய் உணவு ஊட்டி நான் மகிழவில்லை!
உயிர் உதிரும்போதும் அழைத்தீர்கள்!
உதவாப் பிள்ளையாய் நான் புலத்தில்!

அகதித் தமிழச்சி நான் என் செய்வேன்?
அழுத கண்ணீர்த்துளி சேர்த்து
கவிமாலையாக்கி சூட்டுகின்றேன்!
காணிக்கையாக ஏற்றிடுவீர்!
அன்பு மகள்
**பாரதி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

## நூலாசிரியையின் முகவரி

**SAKTHIDEVI SATHIANATHAN**
AM STEELCHEN-19
41517-GREVENBROICH.
GERMANY
E-MAIL; scanma 2000@t-online.de
srasadurai@aol.com



## பதிப்புரை

மற்றுமொரு வளர்ந்துவரும் இளம் கவிஞரின் கன்னிக் கவிதைத் தொகுதியான **''கனவு மெய்ப் படவேண்டும்''** எனும் இக் கவிநூலினை சிந்தனை வட்ட முத்திரையுடன் சிந்தனை வட்டத்தின் 249வது வெளியீடாக வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1989ம் ஆண்டு சிந்தனைவட்டம் உருவாக்கம் பெற்றதிலிருந்து நாறபதிற்கும் மேற்பட்ட இளம் கவிஞர்கள், கதைஞர்களுக்கு தமது கன்னி வெளியீடுகளை வெளியிட களமமைத்துக் கொடுக்கப்பட்டமையினால் அவர்களில் பலர் இன்று புகழ் பூத்த கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் பரிணமித்துள்ளதை பார்க்கும் போது நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

**'நாளைய சந்ததியின் இன்றைய சக்தி'** எனும் அடிப்படை வாசகத்தினை தன்னோடிணைத்து செயற்படும் **'சிந்தனைவட்டம்'** நிச்சயமாக எதிர் காலத்திலும் பல இளம் கவிஞர்களுக்கும், கதைஞர்களுக்கும் அரங்கேறக் களமமைத்துக் கொடுக்கும் என்ற செய்தியினை இவ்விடத்தில் அடக்கத்துடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

''கனவு மெய்ப்படவேண்டும்'' கவிதைத் தொகுதியினூடாக தன்னை ஒரு கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் 'சக்திதேவி சத்தியநாதன்' 'பாரதி' எனும் பெயரில் புலம்பெயர் வாசக நெஞ்சங்களுக்கு நன்கு அறிமுகமானவர். ஈழமண்ணில் 'குரும்பசிட்டி'யைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது புலம்பெயர்ந்து சுமார் இருபத்து மூன்று ஆண்டுகளாக ஜேர்மனியில் வசித்து வருகின்றார். ரீ.ஆர்.ரீ. தமிழ் அலை மூலம் கவிதைத்துறையில் பாதம்பதித்த இவர் இன்று தனது சமூகம் பற்றியும், தாய் மண்ணின் உணர்வுகள் பற்றியும் நூற்றுக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார்.

''கனவு மெய்ப்படவேண்டும்'' தொகுதியில் 'பாரதி'யின் அறுபது கவிதைகள் இணைக்கப் பட்டுள்ளன. ஒரு ஆரம்பகால கவிஞரின் கவிதைகள் என்பதைவிட முதிர்ச்சி பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. எதிர்காலத்தில் 'பாரதி'யிடமிருந்து தரமான கவிதைகள் எதிர்பார்க்க முடியும் என்பது எனது எதிர்பார்க்கை.

சிந்தனைவட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கும் வாசக நெஞ்சங்கள் இந்நூலுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையில் விடைபெறுகின்றேன்.

அன்புடன்
உங்கள்

**கலாபூஷணம் புன்னியாமீன்**

முகாமைத்துவப் பணிப்பாளர்
**'சிந்தனை வட்டம்'**



# வாழ்த்துரை

பாரதியின் கவிதைகள் நமது அன்றாட வாழ்வின்
விம்பங்கள். நாம் வாழும் புலத்தின்
மனப்புலம்பல்களுடன் இந்நாடுகளில் இருமுகங்களுடன்
நாம் நடத்தும் வாழ்வின் அவலங்களின் வெளிப்பாடு
இவரது கவிதைத்தொகுப்பு.

இவரது கவிதைகளில் கோபம் இருக்கும்!
ஆனால் அவரிடம் நான் கோபத்தைக் கண்டதில்லை.
கவிதைகளில் வேகமான வார்த்தைப் பிரயோகம்
இருக்கும்! ஆனால் அவர் வேகமாகப் பேசியதைக்
கண்டதில்லை. அவரது கவிதைகளில்
அடிமைத்தனத்திற்கு எதிரான அழைப்பு இருக்கும்!
ஆனால் வீட்டுக்குள் மருந்துக்குக் கூட அடிமையாய்
இருந்த அனுபவம் அவருக்கில்லை.

ஆகவே அவரது அழுத்தமான பார்வையில்
எமது சமூகக்காட்சிகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன.
எமது சமூகத்தின் வெளிக்காட்சிகள் பதிவுகளாக
அவரது கவிதைகளில்
உயிர்ப்புள்ள பொருளாகப் பதியப்பட்டுள்ளன.

அவரது கவிதைகளின் அழைப்பானது
எமது எண்ணத்திலும் சமூக நடைமுறையிலும்
மறு சிந்தனைக்கான அழைப்பு மணியாக ஒலிக்கிறது.

**இ. சிறீரங்கன்**

பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 

# ஒரு நண்பியின் ஆசியுரை

ஆட்களற்ற தனித்தீவில் தவித்து நின்ற பொழுது காற்றோடு கலந்து ஒலித்த கவிதையில் கரைந்து நின்ற நாள் இன்றுபோல் உள்ளது. காலம் தன் பாட்டில் கரைந்து கொண்டே போய்விட்டது. கரைந்த காலத்துடன் கவிதையுடன் மூழ்கி நதிகளின் கரைகளில் நடந்த பொழுது உதிர்ந்தது அத்தனையும் கவி இதழ்கள். இதழ்களை நதி அள்ளி எடுத்து செல்லவில்லை அத்தனையும் தொடுத்து மாலையாக்கி கவிப்பிரியர்களின் கைகளில் தவழும் நாள் இது. மலைகளில் ஏறி மல்லிகைப் பூ கொண்டு வா என அம்மா அன்று நிலாவை பார்த்து பாடிய பாடல் புலம் பெயர் வாழ்வில் மலைகளின் உச்சிக்கு சென்று நல்ல நட்பை தேடி களைத்த காலத்தில் ரீ.ஆர்.ரீ வானொலி மூலம் கிடைத்த அன்பான தோழி இவள்.

பாரதி பெயருக்கு ஏற்ற மாதிரி இவரின் எழுத்துக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாது, எவர் மீதும் தன் விருப்பத்தை படரவிடாது, அதே வேளை தன் நிலையிலிருந்து விலகாத தோழியாய் படைப்பாளியாய் புலம் பெயர்ந்த நாட்டில் நான் கண்டெடுத்த முத்து என சொல்வது மிகையாகாது. இவரின் கவிதைகள் வாழ்வின் அழகை பிரதிபலிப்பதைவிட வாழ்க்கையின் சுமையை, அதனால் ஏற்படும் வலியை, வலியினால் எழும் தீயை எழுத்தில் வடிப்பதில் மிகவும் சிறந்த கவிஞர் என்று சொல்வதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இவர் தன் அன்னையை நினைத்தெழுதும் கவிதைகளை கேட்கும் பொழுதும், படிக்கும் பொழுதும், நெஞ்சக்குள் அடைபட்டுக் கிடந்த வார்த்தைகள் குமுறி எழும் பொழுது அந்த சோகம் எனக்குள்ளும் படரத்தொடங்கிவிடும். அதைவிட்டு எழுந்துவர முடியாத வலி அதை என்னால் என் நேச மொழியால் உணர்த்த முடியாது. அதை அனுபவித்தால் மட்டுமே புரியும்.



நேர்பாதையில் நடந்த கால்கள் நேர்கோட்டிலிருந்த தவறி அலைந்த பொழுது அவரின் ஊரும், அந்த மண்ணின் மணமும், கால்பட்டெழுந்த பாதைகளும், வம்சமாக வாழ்ந்த வீடும், இனிய நினைவுகளும் ஒரு பொழுதில் இருட்டு வெளிச்சத்தை துரத்திவிட்டு தன் கைகளால் இறுகப்பிடித்த ஊராகிபோய்விட்டதே எங்கள் வாழ்வும் வளமும் நிலவின் ஒளி இழந்து கிடக்கின்றதே என இவர் எழுதும் கவிதைகள் ஒரு தெருப்பாடகனின் சோகக் குரல்போல எப்போதும் ஒலித்தபடியே இருக்கும்.

கவிதை எப்பொழுதெல்லாம் கசிகிறது ? வாழ்வின் திசைகளை ஊடறுத்து விழிகள் செல்லும் பொழுது அதனால் ஏற்படும் பாதிப்பினால் கவிதை கசியத் தொடங்குகின்றது. அப்படி எழுந்த கவிதைகள் புலம் பெயர் வாழ்வில் இராமர்களாலேயே சிறைவைக்கப்படும் சீதைகளைக் கண்ட பொழுதும், மனதாலேயே அவர்கள் தீக்குளித்த கதைகளை கேட்ட பொழுதும் பாரதியின் பேனா தீயை கக்கி நிற்கும். அன்னைக்காய், மண்ணுக்காய், பெண்ணுக்காய் என உருகி உருகி இவரின் பேனா அழுதிருக்கின்றது. என்னையும் அழவைத்திருக்கின்றது. எல்லோருக்காகவும் கவி படைக்கும் பாரதி இவரின் படைப்புகளுக்கு உறுதுணையாக அருகிருக்கும் அன்பான கணவருக்காய் ஏன் கவி எழுதவில்லை என அவரிடமே கேள்வியை தொடுத்துவிட்டு வார்த்தைகளால் சொல்ல முடியாத துயர் நிறைந்த புலம் பெயர் வாழ்வை வாழ்வின் பெரும் பகுதி இத்துயருக்குள்ளேயே உழன்று கரைகின்றதே என்ற ஏக்கமும் இவரின் கவிதைகளுக்குள் நிறைந்து வழிந்து என்னையும் அதனுள் மூழ்கடித்து விடுகின்றது.

பாரதி இது போல பல கவிதை நூல்களை வெளியிட்டு, கவிதை என்றால் என்ன என்பதை பலருக்கு வெளிப்படுத்த வேண்டு மென்று வாழ்த்துகிறேன்.

உன் உயிர்த்தோழி

*சாந்தினி வரதராஜன்.*

# வாழ்த்துரை

பாரதிக்கே தமிழில் வாழ்த்தா? நியாயமான எண்ணமே.
இந்த பாரதிக்கும் தமிழின் மீது,
அதனை நேசிப்பவர்கள் மீது,
அலாதிப் பிரியம்.
கோபமும், ரோச உணர்வும் அந்த பாரதி போலவே.
ஆனால் வெளிப்படுதலில் கூச்சமும், தயக்கமும்
இந்த பாரதிக்கு மிக அதிகம்.
அதுவே வேறுபாடு.
இதுவே இவரில் நாம் கண்ட குறைபாடு.

குடும்ப நலனிலும், சமூக வளங்களிலும், குறிப்பாக
பெண்கள் உயர்விலும் தன் பாணியில் இவர் காட்டும்
அதீத அக்கறையும், செயற்பாடுகளும் நம்மையும்
அதிகம் கவர்ந்தன. மென்மேலும் இவற்றில் இயைந்து
உயர நம் வாழ்த்துக்கள்.

1998ம் ஆண்டு லண்டன்-ரைம் நிகழ்ச்சியில் முதன்
முதலாக தன் 'தந்தையாரிற்கு என் அஞ்சலிகள்' என்ற
தலைப்பில்
நாம் கண்டது இவரது முதலாவது கவிதை.
முகமறியா உறவாக, கண்களில் பட்ட முதல்
எழுத்துக்கள், எம் மனதோடும் படர்ந்தன. தொடர்ந்தன
எழுத்துக்கள், கவிதைகள்.. சிறிய குறிப்புகள், பேசும்
இதயம் - சிறு கதைகள்..
எனத் தொடர் கண்டன.
மௌனமாக நிகழ்ச்சிகளை மனதோடு உள்வாங்கி,
பிடிக்காதவற்றை காட்டமாக, காற்றலைக்கப்பால்



உச்சரிக்கும் பாங்கு இவருடையது. இருப்பினும்
நெருக்கமான நேசிப்பின் வெளிப்பாடு அது- என்பது
தெளிவானது.
இளைய சமூகத்தை சுவாசமாகக் கொள்ளும் எமது
காற்றலையை, நேசமாகக் கொண்டவராகவே
உணர்ந்தோம்.
இன்றும் பார்க்க ஆவலப்படுகின்றோம்.ஆயினும்
லண்டன்-ரைம் காற்றலையில், இவர் எழுத்துக்களின்
அசைவுகள் அண்மைய காலங்கள் ஓய்வு கண்டிருந்தது
வேதனையே..

கை-வழி அசைந்து, மை-வழி வெளியான
பாரதியின் இனிய தமிழ் ஊற்றுக்கள்,
தாள்-வழி பதிவாகி வெளியாகும் செய்தி,
மகிழ்ச்சியானதே. காற்றலை நம் போன்றவர்கள்
நுகர்ந்த வளமான எழுத்துக்கள், மேலும் பலரிடம்
உறவாடப் போவதில்,
நமக்கும் ஆனந்தமே. இதய பூர்வமான வாழ்த்துக்கள்.
இனி, பாரதியின் எழுத்துக்களில் மனம் பதிப்போம்.
வாசக நெஞ்சங்களே, நாமும் உங்களுடன் மெல்லப்
பக்கங்களை புரட்டத் தயாராகின்றோம்.

இதுவரை சற்றுத் தயங்கி வந்த, இவர் எழுத்தின்
கீற்றுக்கள், வீச்சாக தொடரட்டும் என்று வாழ்த்தி
விடை பெறுகிறேன்.
அன்பின்

## நடா மோகன்
(ஒலி-ஒளி படைப்பாளர் - லண்டன்)
02.11.2006

# வாழ்த்துரை

உயிரைவிட உயர்ந்தது எதுவுமே இல்லையென்று ஊர்விட்டுப் புறப்பட்ட நாங்களும் உயிரைக் கொடுத்தேனும் எம் உறவுகளுக்காய் மண் காப்போம் என்று மரணத்தை யாசித்து நின்ற மண்ணின் மைந்தர்களும் இருவேறு துருவங்களாய் இருந்தபோதும் அவர்களின் வலிகளை வரிக்குவரி எளிய தமிழில் இழைத்திருக்கும் பாரதிக்குப் பாராட்டு. கவிதை புனைவதோடு நின்றுவிடாது கதை, கட்டுரை, பாடல் பயிற்றுவித்தல், விமர்சனம் எனப் பல்வேறு ஆற்றல்கள் கொண்ட பெண். நான் அறிந்த எழுத்தாளர்கள் பலரில் எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கும். ஆனால் எழுதியதைப்போல் வாழ்கின்ற சிலரில் பாரதியும் ஒருவர். மற்றவர்களின் துன்பத்தைத் தனது துன்பமாய்ப் பார்க்கும் பாரதி சிறுமைகள் கண்டும் சினந்திருக்கிறார். அவரின் பேனா தலைப்பாகை கழற்றித் தலை குனிந்தபோதெல்லாம் மனிதம் தலை நிமிர்ந்திருக்கிறது.

படைப்பாளி என்பதற்கும் அப்பால் பாரதி பண்பாளி என்று நான் பாராட்ட விரும்புகிறேன். அகராதி வைத்துக்கொண்டு தாம் எழுதும் சொற்களுக்குப் புதுச்சொல்லும் புரியாத சொல்லும் தேடும் போது வலிந்து தேடாத வார்த்தையில் தனது வரிகளைப் புனைந்திருக்கிறார். அதில் சிலவற்றில் நான் நனைந்திருக்கிறேன். சரியான இடத்தில் சரியான வார்த்தைப் பிரயோகம் செய்து நினைவுக்குமப்பால் கனதியாகக் கவிதையை இட்டுச்செல்லும் ஆற்றல் பாரதிக்கு வசப்பட்டிருக்கிறது வாழ்த்துக்கள்.



காலங்கடந்து வெளிவரும் கவிதைத்தொகுப்பு இது. காரணம் காசு பார்க்கும் எண்ணமில்லாமல் கவிதைத் தொகுப்பு வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தின் வெளிப்பாடு. வெளியீட்டின்போதுகூட நான்கு பேர் வந்தாலும் நாட்டமுள்ளவர்கள் மட்டும் வரவேண்டும் காட்டமாகத் தன்னை விமர்சிக்க வேண்டும் அதுதான் தன் கவிதைக்குக் கனதி என்று எண்ணுவதே ஆரோக்கியமான ஒன்றல்லவா!

விமர்சனம் எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு தன்னைப் புடம் போட்டுப் புனிதப்படுத்த நினைப்பதால்தான் பாரதியின் நட்பு இன்றும் எம்முடன் தொடர்கிறது என்று நான் நம்புகிறேன். ஒரு கவிதைத் தொகுப்போடு திருப்திப்பட்டுக் கொண்டு காலத்தைக் கரைத்துவிடாது காலம் உங்கள் கவிதைகளில் கரையவேண்டுமென்று கேட்டு விடை பெறும்

அன்புறவு

**பூநகரி இரவி.**

# என் கதை

22 வருடங்களாக அம்மாவின் சேலை நுனியைப்பற்றியபடி தாய் தந்தையே உலகமாக, நான் பிறந்த குரும்பசிட்டியே சொர்க்க பூமியாக வாழ்ந்த வளர்ந்த குழந்தை நான் எதிர்பாராமலே ஜேர்மனிக்கு வந்தது 1984ல். தாய்மண்ணைப்பிரிந்த ஏக்கம் அம்மாவின் அருகாமையை இழந்தது எல்லாமே இழந்துபோனதான உணர்வில் பன்னிருதிங்கள் பாலைவனத்தொரு வாழ்வாய் என்னிரு செவியில் இன்பத் தேன் பாய்ந்ததோர் நாள்! தரணியெல்லாம் தமிழ் வாசம் பூசி, தமிழர் மனங்களெல்லாம் தாய்மண் பாசம் தூவி தளர்ந்த மனங்களை நிமிர்ந்தெழ வைத்த ரீ.ஆர்.ரீ தமிழ் அலையது! வானலை தவழ்ந்ததால் என் விரல்களில் மீண்டுமாய் தூரிகை இணைந்தது.

பெண்ணின் பெருமையை தாய்மண்ணின் அருமையை மனிதர் முகங்களை அவர் மறைத்த மனங்களை! அம்மா என்னும் அற்புதப் படைப்பினை! என் கண்ணீர்க் களிப்பு அத்தனை உணர்வையும் எழுத்தினில் வடித்திட எழிலாய் தொடுத்த தமிழலைக்கு கோடி நன்றிகள்!

கவியால் இணைந்த கவின்மிகு தோழி சாந்தினி! கன்னித் தமிழால் இணைந்த தர்ஸண்ணா! ரவிஅண்ணா! எழுது! எழுது! என ஏணியாய் நிற்கும் குகநாதன் அண்ணா! நடா மோகன் அண்ணா! (வண்டன்ரைம்) இன்தமிழால் கிடைத்த இனிய உறவுகள் இவர்களுக்கு நன்றிகள் சொல்லிட நான் கடமைப்பட்டவள்!



எல்லாவற்றுக்கும் மேலாக எனது கிறுக்கல்களை எல்லாம் பாராட்டி கணனியில் பத்திரப்படுத்தி இடையிடையே இணையத் தளங்க்ளெல்லாம் அனுப்பி என்னை எழுதவைத்துக்கொண்டிருக்கும் என் அன்புக்கணவருக்கு என் ஆயுள் உள்ளவரை நன்றி சொல்வேன். எனது கவிதைகள் . சிறுகதைகளை இடையிடையே பிரசுரமாக்கி உற்சாகம் தந்த பூவரசு ஆசிரியர் திரு. இந்துமகேஸ், மண் ஆசிரியர் திரு. சிவராஜா அவர்களுக்கும் மிக மிக நன்றிகள்!

இணையத்தளத்தில் என் கவிதைகளைக் கண்டு பாராட்டி தனது பல்கலைக்கழக பாடநூலில் எனது இரு கவிதைகளை இணைத்த அன்பு உறவு திரு. முத்துநிலவன். கதையை விட்டிட்டு கவிதையை எழுதுங்கோ! என்று எப்போதும் அன்பாகச் சத்தம் போடும் வரதராஜன் அண்ணா, அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டும் எனது கவிதைகளை வாசித்து ஊக்கம்தரும் ராணிஅக்கா. எனது கவிதைகளைப் பாடலாகப் பாடி மகிழ்விக்கும் இசை ஆசிரியை தர்மினி ரீச்சர், கணேஸ் அண்ணா, ராஜன் அண்ணா, எனது மகள் தமயந்தி, கவிதைப் புத்தகமாக்கி வெளியிட மிக்க உதவி புரிந்த ஊடகவியலாளர் திரு. செல்வராஜா அவர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றிகள்..

இன்னும் எனது கவிதைகளை விமர்சனம்
செய்துஎன்னை ஊக்குவிக்கும் அன்பு உள்ளங்கள்
அனைவர்க்கும் நன்றிகள். உங்கள்
விமர்சனங்களுக்காய் காத்திருக்கும்..

பாரதி.
ஜேர்மனி.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கனவு மெய்ப்படவேண்டும்

## கவிதைத் தொகுதி

**- பாரதி -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# கண்ணீர் சொல்லும் கவிதையொன்று,

பனையும் தென்னையும் பலாவுடன் மாவும்
பல ஊரும் போற்றும்
பெருமை பெற்ற தேன்கிணற்று நீரும்
பட்டம் பெற்றோர் பல்கலைக் கலைஞர்
பக்தியைத் தெளிக்கும் பராசக்தி கோவில்
பாங்குடன் அமைந்த என் தேசத்துக் கிராமம்
பாதகச் சிங்களப் பாதம் பட்டதால்
பாலைவனமாய்ப் போனது பாரீர்

இரண்டு வருடங்கள் இருந்தாலே அதிகம்
வைத்தியர் கொடுத்த கடைசிக் கடிதம்
இருண்டபாதையில் இயமன் வருவதற்குள்
தன் செல்ல மகளை சின்ன மகளை காணமாட்டேனா
தவித்த தந்தை தளர்ந்த மனதுடன்
ஏக்கத்துடனே இறையடி சேர்ந்தார்

சிங்களக் கூலிகள் சிதைத்து அழித்த கிராமம்
எங்கேஅவள் சிந்தும் கண்ணீர்
சொல்லுது கவிதை ஒன்றிங்கே
எந்தன் தந்தை புதைகுழி முன்னே மண்டியிடவேண்டும்
என்னுள் பொங்கும் கங்கை நீரைக்
கரைத்து விடவேண்டும்
உள்ளம் எங்கும் பொங்கும் புயலைக்
குறைத்து விடவேண்டும்

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



உறவின் உயர்வை நினைந்தே நானும்
உருகி அழவேண்டும்
கனவிலும் உம்மைத் தேடி அழும் குரல்
காதில் விழவில்லையா?

நினைவிலும் நிதமும் வாடிடும் என் முகம்
மனதில் எழவில்லையா உந்தன் மனதில் எழவில்லையா
மகளே என்னும் அன்புக் குரலைக் கேட்க முடியாதா
மாலைப் பொழுதில் மாதவன் பாடல் மறக்க முடியாதே
என்னால் மறக்க முடியாதே
கொடையில் சிறந்த கர்ணன் போல
கொள்கை கொண்டீரே
கொடுத்த உயிரை
எடுத்துக் கொண்டான் என்று சொல்வீரே
என்று சொல்வீரே.



- பாரதி







# நாளை வருவாரோ?

கொப்பும் குலையுமாய் கொழுந்தும் குருத்துமாய்
கலகலத்தபடி என்னைக் கைகுலுக்கி
நலம் கேட்கும் ஒற்றைத்தரு....
இன்னும்.. சோகம் சுமந்தபடி..
தென்றல் அசைத்தும் கூட ..
சலனமின்றி..மௌனித்து

ஊரே திரண்டிருக்கும். ஒளிமழையாய்
நனைத்திருக்கும்.
பாலும் பழமும் ஊட்டி
பட்டும் சாத்தி மகிழ்ந்திருக்கும்.
நாளும் சந்தோஸ நாதஸ்வரம் கலக்கும்.
எல்லாம் கலைந்துபோக
கந்தகத்துக் காற்று மட்டும்...
மூச்சுத் திணறவைக்கும். முரட்டுக் காலும் படும்.

காற்றும் பயந்ததுவோ? மூச்சுத்
தொலைத்திருக்கும்.
காலம் கரைதல் சொல்ல...
கறையான் புற்றெடுக்கும்.
நேற்றுப் போனவர்கள் நாளை வருவாரோ?
நெருப்பும் அணையாதோ? என்
நெஞ்சும் மகிழாதோ?.



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பொன் அம்மா

விழிநீர் வழிந்தோடி வார்த்தைகளைத் தேடியதில்
விரிந்தது கவிதையல்ல
விழிமூடி உறங்க எண்ணி விடைபெறாமலே
சென்ற அன்னையிடம்
விடைதேடும் ஓர் மனதின் தவிப்பு இது.

ஈரைந்து மாதம் இன்னல்கள் பொறுத்து
பாரீந்த பின்னும் பத்தியம் காத்து
நேரிந்த வழியென்று நிமிர்ந்து நடக்கவைத்த
தாயென்ற தெய்வமே உந்தன் தங்க முகம்தேடுகின்றேன்.

கண்களில் நீர் வழிந்தால் கலக்கம் மிகக் கொள்பவள் நீ
கங்கையிலென் கண் மிதக்க பார்த்திருப்பதேனம்மா
கண்ணுறங்கும் போதினிலும் கனவுகளில் நீ கலக்க
கரைந்தழுது கலங்குகின்றேன்
உன் மனதும் கல்லாய் மாறியதோ?

பாலூட்டி பரிவூட்டி பசிக்குணவூட்டி வளர்த்தவளே
தாலாட்டி உறங்கவைத்து தமிழ் அறிவூட்டி வளர்த்தவளே
நாட்டில் அகதியாகி நலிவுற்று நோயாளியாகி
எக்காட்டில் உறங்குகின்றாய் எழுந்தோடி வந்திடம்மா.

உந்தன் மடி வேண்டுமம்மா
உறங்கி நானும் நாளாச்சு
உண்மை அன்பு வேண்டுமம்மா நீயில்லா உலகில்
அது இல்லையம்மா.

- பாரதி






# அழுகின்ற கண்ணீரும்....

மனசோடு கதை பேசும் மௌன அன்பு
மடியோடு தாலாட்டும் சுகங்கள் இன்னும்.....
விழி தோய்ந்த அன்பாலே...வழிந்த சொர்க்கம்.
அழுகின்ற கண்ணீரும்....உன்னைத் தேடும்.

அம்மா!உன் தோள்மீது தலைசாய்க்க வேண்டும்.
அழுகின்ற கண்ணீரால் அர்ச்சிக்க வேண்டும்.
ஒருவாய் அமுதுனக்கு நான் ஊட்ட வேண்டும்.
ஒளிர்கின்ற புன்னகையில் நான் மகிழ வேண்டும்.

கிடைக்காத வரமென்று புரிந்திட்ட போதும்
துடிக்கின்ற மனசொன்று தினம் ஏங்கும் பாவம்.




- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# இன்னும் எந்தன் காதில்



உதிக்கும் கதிரும் உறங்கும் இரவில்.
எறிக்கும் நிலவும் எடுக்கும் ஓய்வு
உதிரும் விழிப்பூ உதிர்ந்தபடியே....
உன்னை அர்ச்சிப்பதற்கா? என்
உள்ளத் தீயை அணைப்பதற்கா?


நீரில் மிதந்த விழிகள். நீ தந்த சுகமாக...
நினைவில் வாடுகின்ற கனவே வாழ்க்கையாக....
கால இதழ் சருகாக...மனக் காயம் கனமாக..
இஞ்ஞாலத்திருக்கின்ற இப்பாவி உன் பெண்ணாக!
காற்றுச் சுமந்து வந்து சொன்ன-
சோகக் கதைகளெல்லாம்
நேற்றுப் போல் நெஞ்சில்...நெருஞ்சி உறுத்தலாக.
காத்துக் காத்திருந்து கரைந்தாயோ? வானத்திலே
உன் கண்ணீர்த் துளிகள் மட்டும்.. என் கண்கள்
வழியாக!



- பாரதி



# மீண்டும் உன் மடி



இடர்கள் வந்து சூழ்ந்தபோதும்
மிடியில் நானும் வீழ்ந்த போதும்
மிதந்த விழிநீர் வழிந்த போதும்
மிஞ்சும் வார்த்தை அம்மா தானே

அன்பு என்னும் தளையிட்டு
அகிலத்தையே அரவணைக்கும்
தாய்மை என்னும் தெய்வீகத்தால்
தவமாய்க் கிடைத்த என் தாயே
சேயாய் பிறந்து மண்மீது
மீண்டும் உந்தன் மடி தவழ்ந்து
தூய்மையான உன் அன்பில்
துளிர்த்து வளர வரம் கேட்பேன்
மீளாத்துயிலில் நான் ஆளும்போதும்
மீண்டும் உன் மடி உறங்கும் குழந்தையாய்



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# இன்றும் இனியும்!

மஞ்சுப்பொதிக்குள் மறைந்த மதியை
மதியம் தேடி அழுதிடும் மழலையாய்
மெல்லச் சோகம் இருளது போர்த்தும்.
இதயம் உணர்ந்திட இருவிழி பெருகும்.



விழிநீர் துடைக்க உன் விரல் இனி நீளுமா?
துளியாய் ஏக்கம் எட்டிப்பார்க்கும்.
ஏனிந்த மாற்றம்? எப்படிச் சாத்தியம்?
கூடு பிரிந்திட சிதறிப் போனதில்
பாதைகள் எல்லாம் நீளமாய் தொலைவாய்...
பாதியில் வந்த பருந்துக்கு நீயும் இரையாய் ஆனதாய்.
அடிக்கடி மனசு சமாதானப்படுத்தும். ஆயினும்..


அழுதலில் எனது சோகமும் குறைவதால்..
இன்றும் இனியும்...
என் இறப்பது வரைக்கும்.



- பாரதி



# முகாரி மட்டும்



அன்னை மண்ணில் அனர்த்தம் மெல்ல
ஆரம்பித்த காலம் தன்னில்
அன்புத்தாயை அருமைத் தந்தையை
எல்லாம் தொலைத்து தொலைவாய் வந்து
கல்லாய்ப் போன மனங்களிடையே
காலம் எல்லாம் கரைந்து போக

தென்றல் ஒன்று மெல்லத் தொட்டு
இத் தேசம் தன்னில் துணையாய்த் தோள்தர
நேசம் மீண்டும் நெஞ்சில் பரவிட
பாசப் பூக்கள் மலர்ந்து பன்னீர் தெளித்திட
இவ் வாசம் போதுமோ இதுதான் வாழ்வோ?

உதயம் தந்த தெய்வங்கள்
அஸ்தமனம் கூட அறியாதிருந்த அகதிப் பெண்ணாய்
அன்னைதேசம் அனலிடை எரிகையில்
பிடில் வாசிப்பதற்காய் பிறதேசம் புகுந்தவளாய்
இன்று முகாரி மட்டும் என் பிடிலில் எஞ்சிட
முகம் தொலைத்து முகவரி தொலைத்தேன்
முகாரி மட்டும் அகலாத் தோழியாய்!



- பாரதி

www.tamilarangam.net




# நித்திய சோகம்

இது தூரிகை வரைந்த ஓவியமல்ல
காரிகை வரைந்த கண்ணீர்க் காவியம்
அகதி வாழ்வின் அத்தியாயங்களிலே
நியதியாய்ப் போன நித்திய சோகம்.

சிறுகை அளைந்த வட்டில் சோற்றை
சிரிப்புடன் ரசித்து ருசித்து நீ உண்டதும்
நாழிகை கடந்து நடு இரவெனினும் மடிமீதிருத்தி
ஒருகை உணவு ஊட்டி பின் உண்பதும்

அஸ்தமனத்தின் இறுதிக் கணம்வரை
எந்தன் நினைவினில் நனைந்து நீ கரைந்ததாய்
சினத்துடன் சுற்றம் குற்றம் சுமத்தும்
பொழுதுகள் எல்லாம்
சிலுவையில் அறையப்பட்டவளாய்
நான் சிதறிப் போவது உனக்குத் தெரியுமா?



- பாரதி





# நின்று நிமிர்ந்த போது ...



மழலைக் குரலில் மனமது உருகி
மகவாய் அகவை மறந்து சீராட்டி
ஒவ்வோர் பாதச்சுவடும் பதித்திட
உறுதியாய் நின்று உயர்த்திய ஏணிகள்.

இதயம் நிறைந்த அன்பைத் தந்து
இமை மூடாமல் விழிக்குள் காத்து
விரல்கள் பற்றி நான் விழுந்துவிடாமல்
வேராய் நின்ற கற்பக தருக்கள்.

எழு! எழு! என்றவர் எங்கே சென்றீர்?
நின்று நிமிர்ந்த போதினில் நீர் ஏன் மறைந்தீர்?
மண்ணே! விண்ணே! மதியே! காற்றே!
என்னைச் சுமந்தவர் எங்கே போயினர்?
நினைவுகள் கனத்திட... நிமிடத்துளியெலாம்
தேடியபடியே .. ..

- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# நமக்கென்றும் நால்வர்!

அடிமைத்தளையை அறுக்க எழுந்தவன்.
அருமைத் தமிழின் அழகு புரிந்தவன்.
உரிமைக்குரலை உயர்த்தி நிமிர்ந்தவன்.
உரும்பராயின் கரும்பாய் மலர்ந்தவன்.

வேள்வித் தீயின் முதல் வித்தாய் தமிழ்
வேதம் போதித்த சிவகுமாரனாய்
வெறும் சோற்றுக்கலைவது வாழ்வல்ல என
வெடித்துப் புயலாய் எழுந்தவனே!

தியாகத் தாயின் முதல் மைந்தா!
மனத் திடத்தின் மறு உருவே!
மரணம் என்பது உனக்குண்டோ?
மண்ணில் விதையாய் எழுபவனே!



- பாரதி



# வெற்றித் திலகமிட்டு ..
# வீர வாழ்த்து ஒன்று ..

அடிமைத் தளையின் இரும்புப் பிடியில்
அக்கினித் தணலிடை அந்நியக் காலிடை
அன்னைத் தமிழ் மண்ணாள் நான் செந்நீர்
வடித்திட வெடித்தவன் நீ..!
கன்னல் தமிழைக் காப்பதற்காய்
கங்குல் அழித்தே என்னை மீட்பதற்காய்
இன்னல் துடைக்க எழுந்தவனே!
இதயம் நிறைந்து வாழ்த்துகின்றேன்!
அன்னை என்னை அடிமை என்றார்.
அழகுதமிழை அநாதை என்றார்.
அருமை மைந்தரை மாக்களாக்கி
அகிம்சைப் போர்வையில்
ஆட்சி அமைக்க நின்றார். அவரை..
அனலென எழுந்து கருக்கிய கதிர் நீ!
அகவை ஜம்பதில் வாழ்த்துகின்றேன்
அகிலம் போற்றிட அரியணை ஆள்வாய்.!
கண்ணிவெடிகள் சுமக்க வைத்தார்.
கந்தகப் புகையில் கலங்க வைத்தார்.
கெலியும் செல்லும் குண்டு மழையைப் பொழிய
கிலியில் என்னை அலற வைத்தார்.
பச்சைக் குருத்தைப் பறித்தெடுத்து
பாய்ந்த குருதியில் எனை நனைத்து
நச்சுப் பாம்பெனப் படமெடுத்து
நாசக் கூத்துகள் ஆடி நின்ற
பேய்களை விரட்டப் படை சேர்த்தவனே
ஈழப் பெண்ணையும் உயர்த்திய



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



பெருமை பெற்றவனே!
தூரிகை எல்லாம் உன் பெயரை
பேரிகை முழங்கி கவி எழுதும் நாள்
காரிகை நானும் களிப்புடனே என் கண்மணி உன்னை
வாழ்த்திடுவேன்.!
அம்மன் கோவிலும் தேவாலயமும் பள்ளிவாசலும்
புக்காராவால் புதைந்தே போக அரும்புகள் மலர்கள்
கர்ப்பிணித்தாயுடன் இளைஞர்
அரக்கர் கைகளில் கசங்கிக் கருகிட
பூமாதேவி நான் பொங்கி அழுகையில்
பூங்கரம் கொண்டு அணைத்தவனே!
உதிரத்தை நெய்யாக்கி உயிர்களைத் திரியாக்கி

சதுரத்தை நெருப்பாக்கி சரித்திரம்
படைக்கின்ற வீரரை உருவாக்கிய
கரிகாலனே! உன் கரம் பற்றி களமாடி
மண்ணிலே விண்ணிலே கடலிலே களத்திலே
பண்ணிய சாதனை பாரிலே யார் செய்தார்?
காவிய நாயகனே! என் கண்ணீரை உலரவைத்த
சூரியனே!

தாயக விடுதலை வேட்கையை மூச்செனச்
சுவாசிப்பவனே!
வேழமே! வேலுப்பிள்ளையின் வீரமகனே
வெற்றித் திலகமிட்டு வாழ்த்துகின்றேன்!
வாழ்க! வாழ்க!





# தாய்நாடு

நீளத் தெரிந்த பாதை. மீளத் தொலையும் விழி.
யாரைத் தேடுகின்றாய்? விழியே யாரைத் தேடுகின்றாய்?
கேள்விக்கணை தொடுத்து மனம் வேலி போட முயலும்.
ஆழப் பெருமூச்சு அடிவயிற்றில் இருந்து எழும்பும்.
சுயநலமற்ற அன்பைச் சொரிந்து தன்
சுகமெலாம் மறந்து மகிழ்ந்து
மடிக்குள்ளே வளர்த்த எந்தன்
தாய் இல்லா நாடெனக்கு வெறுமையாய் ..
வேறாய் ஆச்சோ!

தோளில் தூங்கவைத்து தொடர்ந்தேறத் தோளும் தந்து
வாழப் பழக்கியவர் வந்து ஏன் அணைக்கவில்லை?
அப்பா என்றழைத்து அவர் தோளில் துயர் பகிர்ந்து
அமைதி பெற இயலா அவலம் பிழிந்தெடுக்கும்.
இரட்டைச் சடையாட அரட்டை அடித்தபடி
தெருவை அதிரவைத்து தினம் விரையும் வீதியெல்லாம்
புதையுண்ட வெடிகுண்டால் புண்ணாய்ப் போயிருக்க
அழுதபடி தேடிடுமோ எங்கள் ஆரவாரம் மறந்திடுமோ?

சிரிப்போய்ந்த என் வீட்டில் சிவந்த ரத்தம் காய்ந்திருக்க
சிலந்திவலை பின்னி சிறு நாகம் தான் நுழைந்து
இடிந்து தரைமட்டமாகி இன்னும் எம்மைத் தேடி
கறையான் புற்றெடுத்து காயப்பட்டு அழுதிடுமோ?
குங்குமத்தில் குளித்த வானம்
குனிந்து என்னைத் தேடிடுமோ?
குலைகள் சுமந்த தென்னை குருத்தோடு தேடிடுமோ?
குரும்பசிட்டி அம்மன் குடிபெயர்ந்து போனாவோ?
குருதி வடித்த மனம் கண்ணில்
அருவியென அமர்ந்ததுவோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# விடுதலைக் குயில்கள் விதையாகப் புகுந்த இடம்!

மண்ணை நேசித்து மரணத்தை யாசித்து
தம்மைத் தீயாக்கி தாமே தற்கொடையாகி
விண்ணைவிட உயர்ந்தோர் வீரத்தமிழ் மறவர்! இவரை
கண்ணில் முத்துதிர கன்னித் தமிழாலே
வாழ்த்துகின்றேன்.

இளமை தொலைத்தவர்கள்! இனிமைத் தமிழை
வளர்த்தவர்கள்!
இருளை அகற்றுதற்காய் மெழுகாய் எரிந்தவர்கள்.
இகத்தில் இவர் போலே இனியோர் பிறவியுண்டோ?
இதயம் நிறைந்தவரே
இரு கரம் கூப்பி வணங்குகின்றேன்.

விழிகள் பொழிந்த மழை வீரர் துயிலுமிடம் தூய்மையிட
மொழிகள் இழந்த கணம் மனம் துயரைப் போர்த்திருக்க
விதையாய் வீழவில்லை! எம் விழிக்குள் வாழ்பவரே!
விடியல் வரைவதற்காய் வெடியாய் எரிந்தவரே!

கையிலே விலங்கு பூட்டி மெய்யிலே
கண்ணி வெடிகள் தாங்கி
கந்தகப் புகையினூடே கதறிய ஈழத்தாயின்
கண்ணீரைத் துடைப்பதற்காய்
கரும்புலியென எழுந்தவரே!



- பாரதி



மண்ணிலே விதைக்கவில்லை
தமிழ் மனங்களின் புதையல்கள் நீர்!

வளை அணிந்த கரங்கள் கூட
வரலாறு படைத்த மண்ணில்
களை அகற்ற எழுந்தவர்கள்!
கடல் அலையைக் கட்டி ஆண்டவர்கள்!

கரிகாலன் தடம் தொடர்ந்து
களம் ஆடி கனல் ஆனவரே!
வருங்காலம் கடல் காற்று ஈழமெங்கும்
உங்கள் கதை சொல்லி வணங்கிடுமே!





- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# புத்தாண்டு மலர்ந்த பின்னும்...

பனிப்போர்வை மூடிய வீதி
பாதச்சுவடுகளைப் பத்திரமாக்கியிருக்க
மெல்ல நடக்கின்றேன்.
நினைவுச்சுவடுகளும் நீளத் தொடர்கின்றன.

ஆழிப்பேரலை அடங்கிய பின்னும்
அதிர்ந்த மனசு இன்னும் உதிரம் வடித்திருக்க
உதிர்ந்த உறவுகளின் நினைவு அலைகளுக்குள்
நித்தம் சுழன்றபடி நிம்மதியைத் தொலைத்தபடி
இன்னும் எத்தனைநாள்? விடை தேடித்தவித்திருக்கும்.

திங்கள் கரைவது போல் துயர் ஏன்
தீர்ந்து மறைவதில்லை?
கங்குல் அகற்றி ஒளிச்
சுடரேன் பரவவில்லை?
புத்தாண்டு மலர்ந்த பின்னும்
புது வாசம் இன்னும் வீசவில்லை! ஓ!...
ஈழத்தமிழருக்கு இன்னும் விடியவில்லை...



- பாரதி

கனவு மெய்ப்படவேண்டும்

# கல்லறைகள் மீண்டும் கருத்தரிக்கின்றன!

விடியலுக்காய் விதையான வீரமுத்துக்களை
விழிநீரெடுத்து ஆராதிக்க
கார்த்திகை 27ல் அவர் துயிலும் இல்லம் சென்றேன்.
கண்மணிப் புலியொருவன்
காற்றோடு கதைத்த சேதி
காதோடு வந்துசேர
கவியோடு சொல்ல வந்தேன்.
கல்லறைகள் மீண்டும் கருத்தரிக்கின்றன!

கரும்புலியாகி நின்றோம்.
களத்திடை மோதிநின்றோம்.
கனலிடை காற்றாய்ச் சென்று
அணுவையும் பிளந்து வென்றோம்.
தணலிடை வெந்தபோதும்
தமிழ் மண்ணை வேண்டி நின்றோம்.
தடைகளை அகற்றித் தாயின்
சுதந்திரம் காத்திருந்தோம்.

அக்கினிக் குஞ்சுகள் நாம்.
அன்னையின் பிள்ளைகள் நாம்.
அகமெலாம் விடியல் காணும்
ஆவலில் எழுந்தவர் நாம்.
இகத்தினைப் பிரிந்தபோதும்
இதயக் கனவுகள் உருகவில்லை.
இறந்தது உடல்கள் தானே.
உயிரெலாம் ஈழமண்ணிலன்றோ!



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



கல்லறை இருந்துகொண்டு
கருத்தரிக்கின்றோம் நாங்கள்!
கங்குல் அகற்றியே ஒளியை ஏற்ற
கருத்தரிக்கின்றோம் நாங்கள்!

கறையான்கள் புற்றெடுத்த மறைகளை
அகற்ற வேண்டும்!
காளான்கள் அழித்து ஆங்கே
களைகளும் பிடுங்க வேண்டும்!

பாதைகள் சூழ்ந்த முட்கள்
முழுதுமாய் அகற்ற வேண்டும்!
பதுங்கிய நரிகளை நாம்
படையுடன் துரத்த வேண்டும்!

பாதகர் மிதித்த பாதச் சுவடுகள் அழிக்க வேண்டும்!
பாவிகள் மிதித்த பூமி பரிசுத்தம் ஆக்க வேண்டும்!
சுதந்திரக் காற்று வீச புலிக்கொடி விண்ணில் ஏற்றி
சுடர் மிகு ஈழம் காணக்
கருக்களைத் தரித்து மீண்டும்....






- பாரதி



# மலர்வுக்காய்!

கருக்கல் விலக கண்சிமிட்டும் கதிரவனைக் கையசைத்து
தருக்கள் மீதமர்ந்து முகையவிழ்த்து முறுவல் காட்டும்
பூக்கள் நறுமணத்தை நாசி நிறைத்திருந்து
தூங்கிய பனித்துளியை துரத்துகின்ற சூரியனை
துளித்துளியாய் நீர் சிந்தி அழுகின்ற பனித்துளியை
இன்னும் இன்னும் என் மண்தாயின் மலர்வுகள்
அத்தனையும் ரசிக்கவேண்டும்!

மனசு சுமந்த ஏக்கம்!
மலரும் நாளுக்காய்த் தவமிருக்க...
மலைப்பாம்பு விசக்காற்றை
மண்ணிலே பரப்புவதாய் ஓர் சேதி!
கந்தகக்காற்றுக்கே கரையாத
என் தேசம் காசுக்கு விலைபோன
கருநாகத்தால் கலங்கிடுமோ?
மனசு சுமந்த ஏக்கம்!
மலரும் நாளுக்காய் தவத்தோடு!





- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சித்திரையாளே! செவியில் தேன் வந்து பாயாதோ?

திங்கள் தவறாது வந்து செவ்வாய் இதழ் விரித்து
தித்திக்கும் வாழ்த்துரைக்கும் சித்திரைப் பெண்ணாளே!

சந்தனக் காற்று நெஞ்சை நிறைத்திட
சரிகைப் பட்டாடை மேனி தழுவிட
சர்க்கரைப் பொங்கலிட்டு சந்நிதி எங்கும் சூழ்ந்து
அம்மா! என்றழைக்கும் என்
அருமைச் செல்வங்கள்.....
எங்கே போயினரோ?
ஏன்றேனும் கண்டாயோ?......

சிலந்தி வலையமைத்து
சுவாசம் திணறவைக்கும்.
சிறகடித்து வெளவால்
சில பொழுது கலங்க வைக்கும்
பாம்பு பல்லி எந்தன் பக்கம் படுத்துறங்கும்.
பகலும் இருள் மூடி பயத்தில் உறைந்திருக்க - என்
கண்மணிகளின் காலடிச்சத்தம் கேட்கும்
கணங்களுக்காய் நானுமிங்கே..



- பாரதி




# அந்தக் கணங்கள் தந்த ரணங்கள்

நெஞ்சம் நெருப்பாகும் நினைவு சுட்டெரிக்கும்.
அந்தக் கணங்கள்
தந்த ரணங்கள் மனசைக் கொல்லும்.

விடியல் காணுமென்றோர் விழிகள் பிடுங்கியதும்
விடியும் ஈழமென்றோர் குரல்வளைகள் நெரித்ததுவும்
சிறைச்சாலை சிவப்பு ரத்தம் சிந்தி வழிந்ததையும்
முறைகெட்ட ஈனர்களின் மூர்க்கத்தனங்களையும்
கறுப்பு யூலாய் சொல்லும். கண்ணில் செந்நீர் பாயும்.

போதி மரத்தடியில் இருந்து புத்தன் அழுதிருப்பான்.
நீதியற்ற செயல் கண்டு நெஞ்சம் துடித்திருப்பான்.
ஆடி அடங்கியவர் அனைத்தும் மறந்திடலாம். எம்முள்
ஆழப்பதிந்த ரணம் கணமும் வலித்தபடி......





- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# நாளை நம் ஈழம்

புலிக்கொடி ஏறுது. புதுமைகள் கூறுது.
பூக்களைத் தூவுங்கள். எம்...
புதல்வர்கள் செந்நீரில்
பூத்திட்ட தமிழீழ மலர்விது பாடுங்கள்!
புயலாகி புலியாகி புரட்சிக்குள் ஒளியாகி
புலர்ந்திட்ட தனித்தேசம்! இது தமிழரின் தமிழீழம்!
ஒளி கொண்டு எழுகின்றோம்.
விழியாகக் காக்கின்றோம்.
வளமான எம் தேசம். இது அழகான தமிழீழம்.
உழுதுண்டு வாழ்ந்திங்கு உணர்வோடு தமிழென்று
உலகெல்லாம் உரத்துச் சொல்வோம்.
புனிதப் போரினில் மீட்ட மண்ணிது.
புவியினில் ஏற்றுங்கள்.
மனித சக்தியில் மலர்ந்த மண்ணிது.
மனதினில் போற்றுங்கள்:
இனிய எம் ஈழத்தில் இனி இல்லைத் துன்பங்கள்.
இரைந்து பாடுங்கள்.
இரவி எம்மண்ணிலே இணைந்தே நிற்கின்றான்.
இன்தமிழ் சூடுங்கள்.
வீரம் விளைந்த மண் விழுதினால் எழுந்த மண்.
பாரினில் உயர்த்திடுவோம். பகல்
இரவுழைத்திடுவோம்.
நீரினில் நிலத்தினில் நிர்மல வானிலும் ஈழ
பேரினைப் பொறித்திடுவோம்.
தமிழ் வேரினைக்காத்திடுவோம்.



- பாரதி




# வேண்டாம் இனியொரு தலைகுனிவு!

மலர்கள் என்று சுற்றிவந்து
மயங்க வைத்து தேனெடுத்தார்.
மனசின் காயம் மறைத்துவைத்து
மலர்ச்சியாய் இதழ் விரித்திருந்தோம்.

தென்றல் தழுவ தலையசைத்தோம்.
புயலாய்த் தீண்டவும் புன்னகைத்தோம்.
புழுவாய் எம்மைக் கசக்கி எறிந்தார்.
புழுதியிலே நாம் அழுதிருந்தோம்.

கண்ணீருக்குள் அமிழ்ந்தாலும்
கருக்கள் காத்து தருக்களாகி
மீண்டும் மீண்டும் தழைத்தெழுந்து
மீளப் பூவாய்ச் சிரிக்கின்றோம்.

மண்ணுக்குள்ளே புதைத்தாலும்
மறுபடி உயிர்த்து உருவாக்கி
மனிதம் தழைக்கச் செய்பவரே!
மறந்தும் இனித் தலை குனியாதீர்!





- பாரதி

www.tamilarangam.net




# பௌர்ணமி எங்கள் பாதையிலே

சீதனம் என்னும் சீழ்பிடித்த அம்புகளால்
சிதைக்கப்பட்ட சிவந்த மலர்கள் ஆயிரம்
சீதனம் என்னும் பெருநெருப்பில்
சிதை மூட்டப்பட்ட சீதைகள் ஆயிரம்

தீக்குளித்து இறப்பதால் திருந்திடுவார்களா ராமர்கள்
திங்கள் ஒன்று கரைந்ததும் திரும்பவும்
இன்னொரு சீதை தயாராய்
திரும்பத் திரும்ப தினம் தினம் அரங்கேற்றம்

அடுப்பூதும் கரங்கள் இன்று அரசு கட்டில் ஆள்கையில்
துரும்பும் தூக்காத பெண்களின்று துப்பாக்கிகளைச்
சுமக்கையிலே
தரணிகூட மகளிர் படைப் பரணி பாடிப் புகழ்கையிலே
தலைகளை நிமிர்த்திடுவோம்
தமிழச்சிகளாய் நடந்திடுவோம்.
அடிமையென எமை நினைத்து
ஆண்கள் விலை பேசி வந்தால்
கொடுமை என உரைத்து
அவர் சிறுமை உணர்த்திடுவோம்.


சமையல் அறை சாதியல்ல சரித்திரம் படைப்பவர்
நாங்கள் என சங்கங்கள் அமைத்திடுவோம்.
சங்கற்பம் பூண்டிடுவோம்.
சர்வதேச மகளிர் தினத்தில் இன்று..
சுதந்திரமாய்ப் புதுப் பாதையொன்றில்...
பதித்திடுங்கள் உங்கள் பாதங்களை.
பௌர்ணமி தான் என்றும் வாழ்க்கையிலே.



- பாரதி



# நலங்கெடப் புழுதியில்



மண்ணுலகின் தேவதையாய்
மானிடத்தின் தெய்வமாக்கி
பெண்மையென்று படைத்தவனே இன்று..
பேச்சிழந்து நின்றிடுவான்.
கண்ணே! மணியே! என்று காதல் மொழிந்தவர்கள்
சொல்லால் எரிக்கையிலே கல்லாய்ப் போனாயோ?
உன்னைப் பகிர்ந்து உன்னில் பாதியென்றவர்கள்
மண்ணில் எறிகையிலே
மடிந்து மௌனம் கொண்டாயோ?
விலங்கிடா அடிமையாக்கி வீட்டினில் அடைத்தவர்கள்
விட்டிலாய் உன்னையாக்கி வேடிக்கை பார்த்தவர்கள்
குனியவைத்து உந்தன் குரல்வளை நெரித்தவர்கள்
குறுமதி கண்டு நீயும் ஊமையாய் மாறினாயோ?
ஜகத்தினில் ஜனனம் எல்லாம்
உருவாக்கும் வலிமை பெற்றாய்.
அகத்தினில் அன்பு மட்டும் அருவியாய்ப் பெருக்கி
நிற்பாய்.
இகத்திலே உன்னைப்போல இன்னுமோர்
பிறவியுண்டோ?
இருளினைத் துடைத்தெறிந்து
ஒளியினாய் நீ எழும்பு!



- பாரதி

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மகளிர் தினமாமே!

அன்பினிய தோழி! உனக்கொன்று தெரியுமா?
பங்குனி எட்டு மகளிர் தினமாமே!
மனிதரெலாம் குரல் உயர்த்தி உரைக்கின்றார்
கேட்டாயா?

குனியவைத்து குசினிக்குள் உலகமைத்து
பணியவைத்து பாவையர் படியடைத்து
விழி சுமந்த கனவுகளைக் கலையவைத்து அவள்
மொழி உரிமை பறித்தவர்கள் மொழிகின்றார்
மகளிர் தினமென்று!

உருவான கருவொன்று பெண்ணென்று அறிந்தாலே
கலக்கமின்றிக் கலைக்கவைத்து
காரிகையின் கண்ணீரில் குளிக்கின்ற
கனவான்கள் சொல்கின்றார்
மகளிர் தினமாமே!

மகவொன்று இல்லையெனில் மலடியென
ஒதுக்கிவைத்து
மறுதாரம் கைப்பிடிக்கும் மரியாதைக்குரியவர்கள்
மடிசுமக்க மனை சிறக்க
மனக்கவலை அது துடைக்க
கைப்பிடித்தவனின் காரியங்கள்
அத்தனையும் கைகொடுக்க
மண்மீது பெண்ணாக மாதவம் செய்து
பிறந்ததற்காய்
மடலோடு வரைகின்றேன்
மகளிர் தின வாழ்த்துக்கள்!

- பாரதி





# நல்லதோர் வீணை செய்தே

அமைதி பூத்த உன் முகத்தில்
அள்ளித் தெளித்த சோகங்கள்
அகத்தை மறைத்தாலும்.....
அழகுக் கண்ணில் துயரங்கள்.
மயிலே உன் சிறகை ஒடித்தவர் யார்...?
குயிலே உன் குரலை உடைத்தவர் யார்..?
மௌனத்தின் மடியில் உன் முகம் புதைத்ததேன்..?
மலரினும் மென்மை என்றுன் பலத்தை எரித்ததாலா..?
தேன் நீ ! என்று சொல்லிச் சொல்லியே ...
உனைத் தேளாய்க் கொட்டினாலும்...
மான் நீயென வர்ணனை செய்ததால்
மருண்டு நின்றாயோ..?
விளக்கினை எடுத்து வை வெளிச்சம்
உன் வாழ்வில் என்பார்.
விட்டில் பூச்சியாய் நினைத்துனை
விழுத்திடும்....வேதனை பார்த்தாயா?
மலராய் இருந்து கசங்கியே...நீயும்...
மண்ணுக்குள் வீழ்வாயோ?
மானாய் இருந்து நரிகளின் வாயிலே ...
இரையாகி மாள்வாயோ?

புயலாய் எழுந்து புரட்சிப் பூக்கள் தூவிடப்பறப்பாயா?
புலியாய் எழுந்து புதுயுகம் படைத்திடும்...
புதுமைகள் மறந்தாயா?
வீட்டில் பூச்சியாய் தினம் வீணாய்ப் போகும் உன்
வாழ்வும் ஒரு வாழ்வா?
கட்டிலும் தொட்டிலும் வாழ்க்கையல்ல... இனி
கண்களைத் திறப்பாயா?.

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




# அந்த அன்பு

விழியில் இருந்து பொழிந்த நீர்த்திவலைகள்
கன்னத்தில் கோலமிட்டு காதோரம் குறுகுறுக்கும்
உறக்கம் தொலைத்த இரவுகள் எல்லாம்
கனிந்த விறகாய் நினைவு நெருப்பு எழும்பும்

கனிவு சிந்திய தாயின் வதனம்
கனவாய்ப் போன காலம் நோக்கும்
கண்களில் கங்கை பிரவாகிக்க
கரைந்த உள்ளமும் கனலொடு ஓடும்
உண்ணும் நேரமெல்லாம் ஊட்டி வளர்த்த தந்தை
தூசுவிழுந்து கண் சிவந்தாலே
துடித்துப்போகும் அந்த அன்பை...
துடைத்துப்போட...துணிந்தது எப்படி..?

காதலென்று கதை சொல்லி
கழுத்தில் விலங்கு மாட்டியவன்
பூட்டிவைத்த பொறிக்கூட்டில்
பேச்சுரிமை இழந்த கிளியாக..
சிறகை மட்டும் வெட்டாமல் சிறிதாய்ப் பிடுங்கி
ரசிக்கும் இவனுக்கு..
சிலுவை சுமக்கும் நேரம் எல்லாம் எனைச் சுமந்தவர்
நினைவில் கரைவதனால்...
சிலுவை கூட கனப்பதில்லை.





- பாரதி



# இன்னுமாய்



இதய ரணத்தில் இரத்தம் வழியினும்
இருளே வாழ்வாய் ஆனபோதிலும்
இறகு பிடுங்கிய வலிகள் வதைப்பினும்
இன்னுமாய் உந்தன் நினைவுகள் நீளமாய்

என் சிரிப்பைப் பறித்தாய் சிறகை ஒடித்தாய்
சிதைந்த வாழ்வை சீராய்த் தந்தாய்
வரைந்த கனவைக் கலைத்துவிட்டு
வடிந்த விழிநீர் பரிசாய்த் தந்தாய்
அதனால் தானோ இன்னுமாய்
உந்தன் நினைவுகள் நீளமாய்.



- பாரதி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# எப்படிச் சொல்ல?



கண்ணழகா? மூக்கழகா? கண்ணகி போல் அவளா?
பெண்ணழகல்ல என்றாலும்
பெரிய வீடு காணி உண்டா?
காசு நகை சீர் சிறப்பாய் பை நிரப்பி வருவாளா?
மாசு ஏதும் கொண்டவளா? காசு கூட கேட்போமா?

பார்த்துப் பார்த்துப் பெண்ணை மாடாய் நோக்குகின்ற
பரந்தமனம் படைத்தோர் பரிசாய்த்
தந்தனரோ? மார்ச் எட்டை.. ..
பேச்சிலே மட்டும் பெண்ணை
ஏற்றிடும் கூட்டம் அம்மா!
மார்ச் எட்டை புகழ்ந்துவிட்டு
போர்ச்சட்டை போடுகின்ற
பார்நிறை மனிதர் இவர்
பார்வைகள் மாற்றுவோமா?



- பாரதி



# அந்நியக் காற்று

நிலவின் அழகில் நெகிழ்ந்த மல்லி
கலவிக் களிக்கும் சுகத்தில் திளைக்க
குலவிக் கொஞ்சிய மொட்டு மலர்ந்து
நிலவைப் பழித்து அழகாய்ச் சிரிக்க
நிலத்தில் விழுந்த விண்மீனை
சரமாய்க் கோர்த்து தலைதாங்க
தவழ்ந்து வந்த தென்றலது
சூடிய பூவை அணைத்திழுக்க
மகிழ்ந்து மல்லி வாசனையை
மனத்துள் அடைத்திட முயல்கின்ற
அந்தக் காற்று அது .. .. அன்னை தேசக் காற்று.

உரங்களிட்டு உயர்மண் இட்டு
மரங்கள் செழிக்க நீரூற்றி
பரந்து படரப் பந்தலிட்டு
பார்த்துப் பார்த்து வளர்த்திருக்க
நித்தம் சிறையாய் வீட்டுக்குள்
நிலவும் காணா சோகத்தில்.. .. ..
தூய்மைத் தென்றல் தழுவலுக்கேங்கி
துவண்டு வாடி .. சருகாய்ப் போக
துளியாய் வந்த கருமைக் காற்று
தூரமாகி அந்நியப்பட்டது.....



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# இது ஒரு தொடர்கதை!

கனவு சுமந்த விழிகள்.
காலில் சிரித்த கொலுசு.
மனசு நிறைந்த மகிழ்வு.
மலர்கள் வளைத்த கூந்தல்.
நுதலில் பூத்த நிலவு.
முழுதும் .. பறித்தவர் யார்?

மூடக்கொள்கையின்
முரட்டுக் கரங்களில்
மூச்சுத்திணறி இன்னும் ..
முடங்கிக் கிடப்பதா?
முற்றுப்புள்ளி இட்டு
வெற்றுப்பக்கம் நிறைத்து
முந்தைக்கதைகளெல்லாம்
முடித்து வைத்திடாயோ?
இது.. தொடர்கதையல்ல பெண்ணே!
எழுந்திடு துணையாய் நாமும்...!



- பாரதி





# புதிதாய் உயிர்த்தோம்

மேகப்பெண்ணின் கன்னத்தை
மெல்லக் கிள்ளி முத்தமிட்டு அவள்
நாணச் சிவப்பை ரசிப்பதற்கு
நாளும் உதிக்கும் கதிரோடு
போட்டியாகப் பொழுதன்று புலரும் பொழுதில்
விழித்தெழுந்த நாட்களெல்லாம் கனவாக

வாசனைத் தோழியைத் தூது விட்டு
வாவென அருகினில் அழைத்துவிட்டு
வர்ணம் தீட்டிய இதழ்களால் நகைக்கின்ற
வடிவினில் மயங்கி மலைத்திருந்த
வசந்த காலம் எல்லாம் வரைபடமாய்
வந்து போகும் சில பொழுதில்

தென்றல் தவழ்ந்த தேசத்தில்
தேள்கள் புகுந்து விசம் கொட்ட
நச்சுக் காற்றுடன் கைகோர்த்து
நம்மைக் கருக்கிட நினைத்ததோ கந்தகமும்
இரவின் அமைதியைக் கிழிக்கின்ற
இரும்புச் சப்பாத்தின் ஒலி கேட்டு
கருவில் கலைந்த சிசுவோடும்
கசங்கி விழுந்த அரும்போடும்
திகைத்து நின்ற கணமெல்லாம்
தினமும் தினமும் அரங்கேற

புன்னகை படர்ந்த பூமித்தாய் முகம்
புண்கள் தொடர்ந்திட துடித்ததுவோ?
உதிரம் உடம்பினில் ஊற்றெடுத்து அவள்
உதிர்த்த சிரிப்பினை உறிஞ்சியதோ?



- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்




பந்திவைத்து உண்டு வாழ்ந்தோர்
பங்கருக்குள் மூச்சடைக்க
மந்தியெல்லாம் எம் மண்ணையாள
அந்தகராய் இன்னும் இருப்பதாமோ?

அடுக்களைக்குள் அகப்பை தூக்கி
வளை அடுக்கி மகிழ்ந்த கைகள்
தளை உடைத்து களை பிடுங்க
தரை போட்டு கனரகம் கொடுத்து
உறக்கம் கலைக்க ஒரு தமிழன் எழுந்ததால்
தமிழ் மண்ணதனில் புதிதாய் உயிர்த்தோம்.

அடுப்பூதும் பெண்ணிவர்க்கு படிப்பெதற்கு?
என்றடைத்த சிறையுடைத்து
மண் அதிர விண் அதிர மாவீரப் பெண்களாக
புதிதாய் உயிர்த்தவர்கள் பூக்களல்ல நாம் புலிகள்

புழுதியாய்த் தொலைந்திருந்து
புதிதாய் உயிர்த்தவர் நாம்
புரட்சிப் புயலாகி புதுயுகம் படைப்பவர் நாம்
புதையுண்டு போனாலும் விதையாகி
முளைத்தெழுவோம். நாம்
புதிதாய் உயிர்ப்பவர்கள்
புறநானூறு போற்றுபவர்.



- பாரதி





# வல்லமை தாராயோ



கொடுமை கண்டு கொதித்தெழுந்தாய் பெண்
அடிமை விலங்கினை உடைத்தெறிந்தாய்
மடமைஅழிந்திடகவி படைத்தாய் வாழ்வில்
உரிமை பெற்றிட குரல் கொடுத்தாய்.

புயலாய் சீறும் உன் பேனா முனையிலும் நீ
புதுயுகம் ஒன்றைப் படைத்திட முனைந்தவன்
புதுவை மண்ணிலும் புதுமை புரிந்தவன் நீ
புரட்சிப் பூக்களால் புது விதி செய்தவன்

ஓ மகாகவியே மானென்றும் தேனென்றும் பூவென்றும்
பொன்னென்றும் மங்கையரை வர்ணிக்கின்றார்
வார்த்தைகளால் பூஜிக்கின்றார்
வாழ்க்கையென்று வந்தவுடன்
வரதட்சணைக்காய் யாசிக்கின்றார்

இந்த வாய்ச்சொல் வீரர்களை மாற்றி மனிதராக்க
வல்லமை தாராயோ பாரதியே
நீ மீண்டும் மண்ணில் வாராயோ.

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# நீலப் பெண்ணாள்

வைரக் கற்களை வாரியெடுத்து
வண்ண நீலச் சேலையில் பதித்து
வட்ட முகத்தான் வரவுக்காக
வாடியிருப்பாள் மேகப் பெண்ணாள்

முழுமதி வந்ததும் முகில் தலைப்பினால் மறைத்தும்
முத்தமிட்டவனை மெத்தென அணைத்தும்
முன்னிரவெல்லாம் முதுகில் சுமந்தும்
முத்தாய் ஏந்தி ஊர்வலம் வருவாள்

மேகப் பெண்ணின் குதூகலம் கண்டு
மெல்லக் கோபம் கொண்டு கதிரோன்
சூடாய்த் தனது கதிரை விரித்திட
சுருங்கிச் சிவக்கும் பெண்ணவள் வதனம்.

அழகு சந்திரன் என்பதால் அணைப்போ?
அனலாய்க் கொதிக்கும் சூரியன் தகிப்பால்
நீலப் பெண்ணாள் கனலில் கறுப்பாள்
நிம்மதி பெற்றிட முகில் கூட்டம் சேர்ப்பாள்.

ஆதவன் கொடுமையை முகில்கள் உரசிக்கதைத்திட
அமைதியாய் உறங்கிய மின்னல் பளீரென எழுந்திட
பயந்த முகிலும் இடியென அலறிட.
சாய்ந்த கதிரோன் இருளுடன் இணைவான்.
நிர்மலமான வானத்தில்
நிம்மதி குலைந்த சோகத்தில்
நீலப் பெண்ணாள் வடிக்கும் கண்ணீர்
நிலத்தில் பன்னீர் ஆவது எப்படியோ?



- பாரதி



# இழந்த சுகங்கள்.

மஞ்சள் நிலவொன்று மண்ணில் உலவியதோ?
பஞ்சு விரல்களிலே பாசம் தூவியதோ?
சங்கு கழுத்தெனக்கு சாந்தி தருமிடமோ?
நெஞ்சம் முழுவதும் உன் நேசம் தழுவிடுமோ?

மஞ்சுத் திரை விலக்கி கொஞ்சும் பரிதியினால்
மங்கை நீலப் பெண்ணாள் தங்கச் சிவப்பழகோ?
மதியின் முத்தமதில் மயங்கி இதழ் விரித்து
நதியில் சிலிர்த்திருக்கும் அல்லிப் பெண்ணழகோ?
இன்னும் நினைவினிலே இனிக்கும் காலமது.
இன்றும் கனவினிலே இணையும் காட்சியது.
இதயம் கனமாகும். இருவிழியும் மழையாகும்.
இழந்த சுகங்களை நான் இனியும் காண்பேனோ?

மொட்டவிழ்ந்த முல்லை முன்னிரவில் வரவேற்கும்.
கட்டிக்கொள் என்று கைகள் நீட்டிச் சிரித்திருக்கும்.
கொட்டிக்கிடக்கும் குண்டு மல்லி மணம் மயக்கும்.
தொட்டு முகரென்று தொடர்ந்து நாசி சொல்லும்.
கருவண்டுக் கண்களிலே களிப்புக் கூத்தாடும்.
தெருவெல்லாம் சிரிப்பலையில்
தினமும் தோய்ந்திருக்கும்.
பருவப் பறவைகள் எம் சிறகை உடைத்தவர் யார்?
உருவம் வளர்ந்த பின்னும்
உள்ளம் தேடி அழுதிடுதே.





- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# எங்கே எங்கள் புன்னகை

அரும்பாகி மொட்டாகி அழகு மலர் தானாகி
அமுதூறும் தேன் சுமந்து அல்லி மகள் காத்திருக்க
அந்திப் பொழுதில் மதி
அழகுடனே வந்துதித்தான்.

திரைச்சேலை விலக்கியவன்
திருமுகத்தைக் கண்டதுமே
திவ்வியமாய் சிரித்து நின்றாள்..
நறுமணமும் பரிசளித்தாள்.
திரு மகளின் அழகினிலே..
திளைத்த நிலா ஒளி பொழிந்தான்.

நிலவோனை அணைத்தபடி..அழகு மலர்விழித்திருக்க
நிமிஷங்கள் கரைந்தோட..திங்களவன் கவலையுற்றான்.
மலரானே! மறுபடியும் நாளைக்குச் சந்திப்போம்.
மறக்காமல் குளத்தருகே காத்திருப்பாய் என் கண்ணே!
மதிகுனிந்து முத்தமிட..மறுப்புடனே இதழ்மூடி
மறுபடியும் பிரிவை எண்ணி..
கூம்பி நின்றாள் மலர்ப்பெண்ணாள்.

அல்லிமகள் வாடுவதை..ஆதவனும் பாா்த்தபடி
அவனியிலே..பவனி வந்தான்.
அவளுக்காய் கவலையுற்றான்.
புன்னகையைத் தொலைத்துவிட்ட....
பூவைக்காய்த் தான் எரிந்தான்.



பாரதி





# ஊமையாய்.



உருவாக்கி உயிர் தந்து உணவூட்டி மகிழ்ந்திருந்து
குருவாகி அறிவூட்டி குறைவின்றி அன்பூட்டி
மகவாகத் தாலாட்டி மடிமீது சீராட்டி
மண்மீது நான் பெற்ற மகத்தான தந்தை நீ.

காலைவிழிப்பில் கனவாய்க் கேட்கும் உன்
அழைப்பில்
மாலை முழுவதும் மனமது கலங்கிடும்.
சோலைப் பூக்களின் சுகந்தக் காற்றில்
பாலைவனமாய் மனம் ஏங்கும் உன் இழப்பில்.

கடந்தகாலம் நிதம் புரட்டிப் பார்க்கிறேன்.
கனக்கும் மனதில் உன் கலங்கா உருவம்.
கரைந்து உருகித் துடிக்கின்றேன். நீ .
கனவிலும் நினைவில் சிரிக்கின்றாய்.

உள்ளம் உடைந்து சிதறிடாதா?
உணர்வுகள் உறைந்து மறைந்திடாதா?
ஊமையாய் அழுது உறவினை இழந்து
சீமையில் போலியாய் சிரித்து நான் வாழ்வதா?

- பாரதி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அதிசயம் ஆனால் உண்மை



விண்ணைக் கிழித்து விரைந்திடுவேன் விடிகாலை
என்றானே.
மண்ணைப் பார்த்தபடி மனம் கூம்பிச் சோர்வுடனே...
காதலனைக் காணாது கமலப் பெண்ணாள் வாடிநிற்க
கதிர்(க்)கையை நீட்டி ...
அவள் மலர் முகத்தைச் சீண்டி நிற்க
நாணமதில் சிவந்தவளை
செந்தாமரை என்றழைத்தனரோ?

அந்திப் பொழுது மதி அழகு உலா பவனிவர
அல்லி மகள் ஆசையுடன் அவனுக்காய்ச் சிரித்திருக்க
திங்களவன் அல்லியுடன் தினம் இரவில் மகிழ்ந்திருந்து
ஞாயிறைக் கண்டவுடன் நாணி ஓடி மறைந்திடுவான்.
நில்லாய்! நில்லாய்! என்று
நித்தம் அல்லி அழுத குரல்
நிலா! நிலா! என்று எம் செவிக்குள் விழுந்ததுவோ?



- பாரதி



# உன் நினைவு மட்டும்!

விண்ணைக் கேட்டு விழுவதில்லை மழைத்துளிகள்.
மண்ணைக் கேட்டு மனிதரெலாம் நடப்பதில்லை.
மரத்தைக் கேட்டு மலர்கள் இதழ் விரிப்பதில்லை.
மனசைக் கேட்டு காதல் பிறப்பதில்லை!
எனக்குள்ளும் நீ புகுந்தாய்!
என்னைக் கேட்காமலே புகுந்தாய்!
கனவுக்குள் கலந்தபோதும்
உன் காதல் முகம் கலையவில்லை!
கனக்கின்ற சுமைகளெல்லாம்
கழுத்துவரை இறுகி நிற்க
கண்களிலே பரிவு கொண்டு காற்றாகிக்
கரைத்திருந்தாய்!
ஈரஇதழ் பிரித்து இளநகை சிந்துகையில்
என் இதயமெங்கும் இனிய ராகம்
இசையாய்த் தூவி நிற்கும்
நீள நயனங்கள் நிமிர்ந்து எனை நோக்குகையில்
நீந்தி நிற்கும் கருவிழிக்குள் நிழலாடும் என்னுருவை
ரசித்த கணங்களை ரணமாக்கி நிற்கின்றாய்.



முட்சிலுவை சுமப்பதாய் உன் நினைவு!
என்முகம் தொலைந்து போனதாய் ஓர் உணர்வு!
அழைக்காமலே வந்து அக்கினியைத் தந்தவளே!
அழுகின்ற விழிகளுக்குள் அழியாமல்
உன் நினைவு மட்டும்!



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# விடியாதே இரவே விடியாதே

பாலுக்கழுது சோர்ந்து பசியால் உறங்கும் பிள்ளை
காலை மலர்ந்ததென்றால் மீண்டும் கதறிடுவான்
இருளின்கருமையென்றால் பசி மறந்து உறங்கிடுவான்
எனவே இரவே விடிந்திடாதே இன்று விடிந்திடாதே

காலை எந்தன் மகள் பரீட்சை எழுதவேண்டும்
சாலை அருகே சோதனைச் சாவடியில்
சேலை களைவதற்கு துச்சாதனர்கள் பலர்-
அவர்மாலை உண்ட மது மயக்கத்தில்
உறங்குகின்றார் எனவே இரவேவிடிந்திடாதே
இன்று மட்டும் விடிந்திடாதே

நாளை விடிந்தவுடன்
நான் மண்ணில் விழுந்தேன் என்றோ
தோளைத் துளைத்த குண்டால்
மயக்கத்தில் மட்டுமென்றோ
வேளைக்குச் செய்தி வரும் விழிநீர் சிந்திடாதே
என்றான் மைந்தன்
பாழாய்ப் போன மனம் பலமாய்த்துடிக்கிறதே
இரவே விடியாதே இன்று விடியாதே
தலையில் குண்டுபட்டுத் தவித்த ஒர் புலிமைந்தன்
பாயில் உறங்குகின்றான்
பயம் மறந்து உறங்குகின்றான்
அவன் நோயில் இருந்துமீண்டு சீராய் உலாவும்வரை
இரவே விடிந்திடாதே இன்று விடிந்திடாதே




- பாரதி



# நிஜங்களின் தரிசனமாக

அமாவாசை இருளில் நிலவினைத் தேடுகின்றேன்.
அஸ்தமித்த உலகில் அன்பினைத் தேடுகின்றேன்
பாசமும் நேசமும் ஊட்டிய தந்தையே
பாதிவழியில் பரிதவிக்க ஏன் வைத்தாய்
உண்ணும் வேளையிலும் உந்தன் மடியிருத்தி
ஊட்டி வளர்த்த நாட்கள்
கோடியிலே புரண்டாலும் கொள்கைகளில் பிறழாது
கொடுத்துச் சிவந்த கைகள் பிடித்து நடந்த நாட்கள்
இன்னமும் மென்மையாக இசை பாட.....
இதயம் தன்னில்....
ஈரவிழி சொல்லும் இழப்பின் சோகங்கள்.
உந்தன் மறைவினிலே உண்மை அன்பிழந்தேன்.
உறவுகளின் நிஜம் புரிய..உடைந்தழுத என் கண்ணில்
இன்னும் ஊற்று வற்றவில்லை. உன் இழப்பும்.....
ஈடு செய்ய முடியாமல்...
ஒளி தந்து வழி காட்டி விழிமூடி விண் சென்றாய்.
துளிர்க்கின்ற கண்ணீரில் துயில் கூட கரையுதப்பா.





- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# உனக்காக



உழுது பயிர் விளைவித்து உலகுக்கு உணவளிக்கும்
இவர்.. அழுத கண்ணீர் விழுவதனால் அழகாமோ?
நெல்மணிகள்.
ஏர்பிடித்து ஏற்றம் இறைப்பதனால்
ஏழ்மையும் இவரை எட்டிப் பிடித்ததுவோ?

மண்ணை உழுது மனிதர் பசியாற்றும் இவர்
மனையில் உலைகளுக்கு மணி அரிசி கிடைக்காதோ?
உன் வயிறு பட்டினியில் உலைக்களமாயிருக்க
ஊருக்கே உணவளிக்க ஏர் பிடித்த பெருமகனே
உனக்காக வரம் கேட்டு உதிக்கின்ற கதிருக்கு
எனக்கான பங்களிப்பாய் படைக்கின்ற பொங்கலிது.

- பாரதி





# அழகு



முகில் தாவணிக்குள் முழுநிலா ஒளிந்திட
முல்லைப் பெண்கள் முறுவல் பூத்திட
அருவி அம்புலியை நிழற்படம் எடுத்துக் காட்டிட
அல்லிப் பெண்ணாள் அழகிதழ் மலர்த்தி நகைப்பாள்

விண்ணில் நடக்கும் விந்தைச் செயலால்
மண்ணில் மலர்கள் மலர்ந்து சிரிக்கும்
காதல் பெண்ணாள் கரங்கள் கோர்த்து நடந்து
கண்ணால் பருகிடும் சுகமோர் அழகு

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# புயலாய் எழு



வாயிருந்தும் ஊமையானாய்
வார்த்தைகளையும் நீ மறந்தாய்
வீட்டுச் சிறையில் அடைபட்டிருந்தே
வீரம் மறந்து போனாயோ


மலராய் நீயும் இருக்கும் வரை
மதுவுண்ண நாடும் வண்டினங்கள்
புயலாய் எழுந்து போராடு
புதிதாய் எழுதும் வரலாறு

- பாரதி





# வதைபடும் இனமாய்



சிவந்து சிரிக்கும் செம்மண் நிலங்கள்
சீராய் நிமிர்ந்த தருக்கள் கூட்டம்
முகர்ந்து பார்க்கத் தூண்டும் பூக்கள்
முத்தாய் மிளிர்ந்த எந்தன் தேசம்

பிறந்த மண்ணைத் தொலைத்துவந்து
பிரிந்து போன உறவை நினைந்து
வருந்திடும் வாழ்வில் வசந்தம் எங்கே
வதைபடும் இனமாய் தமிழினம் இங்கும்

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அன்புத் தோழியாய்

வார்த்தையில் தேன் வடித்து
வாழ்க்கையில் தேளாய்க் கொட்டும்
வானர மனங்கள் கண்டு
வாடி நான் நின்றபோது
அமைதியே வடிவாய் வந்தாய்
அன்புத் தோழியாய் அன்னை போலானாய்
அடுத்தொரு பிறவி என்றால்
அதிலும் உன் நண்பியாய் நான் ஆகவேண்டும்



- பாரதி





# விழிப்புக்கள்



உணவும் மறந்தது உன் முகம் பார்த்தபின்
உறக்கம் தொலைந்தது உன் நினைவில் கரைந்ததால்
உலகம் எங்கும் பறந்ததாய் உணர்வு
உன்னை மனசு சுமந்த சுகத்தில்
உருகி உதிரும் விழிப் பூக்கள் மட்டும்
உயிர்த்துளி என்னுள் ஒட்டிக் கொண்டிருக்கும்
சாட்சிகளாக.

- பாரதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# நாளை உண்டு நமக்கு!

போரின் பிடியில் நசுங்கி
புழுதியோடு கசங்கி
நேராய் நிமிர்ந்த நேரம்.. சுனாமி..
நீட்டியதோ தன் கரத்தை...

கண்படுமோ என்று
கன்னத்தில் வைத்த பொட்டு
கலைந்துவிடுமுன்னே கடலோடு கலந்த கங்கை.
கரங்களால் அணைத்த அன்னை
அலையோடு போராட
காப்பாற்ற விரைந்த தந்தை
நீருக்குள் புதைந்த சோகம்..

ஓ! கடலம்மா!
கலங்கிய நெஞ்சங்கள் இன்று
கரம் கோர்த்து கருணை தந்தார். அவர்க்கு நன்றி.
நாளைக்கு.... நாளைக்கு....?
நமக்கு உண்டோ விடிவொன்று?
விழி துடைக்க வந்தவர்கள்
விரல்களிலே பட்ட ஈரம்
வழியோடு காயாமல் மழையாகாதோ?
மனங்களிலே..



- பாரதி



# புதுப்புது அர்த்தங்கள்!

அரும்பு விரித்து அழகிதழ் மலர்த்தி
கரும்புத் தேனது களிப்புடன் சிந்தி
வண்ண நிறங்களை வாரியிறைத்து
ஆடைகட்டி அழகு செய்து
கண்ணைக் கவர்ந்து தன்னை உணர்த்திட
நறுமணம் சேர்த்து
திரும்பிப்பாரென திசையெலாம் சிரிக்கும் பூக்கள்!
தினமது கரைந்திட காற்றொடு சருகாய்...

மலரதன் வாழ்வும் மௌனம் ஆகிட....
நாளை மரணம் வருமெனப் புரிந்தும்
நறுமண மலர்கள் அழுவது உண்டோ?
நாங்கள் மட்டும்....?
நாளையை எண்ணி இன்றைய மகிழ்வை
நாளும் தொலைத்து நலிவது கூட்டி...
இதழது விரித்த பூக்களெல்லாம்
இதமாய்ப் பகிர்ந்த அர்த்தங்கள்..
இதயம் மட்டும் கேட்டாலும்....
இருவிழி இன்னும் கனவுகளில்..





- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# காகிதப்பூக்கள்

என் மனத்தடாகத்தில் மகிழ்ச்சிப் பூக்கள்
பூத்ததொரு காலம்.
இன்று மௌனத்தில் கழியும் மயான அமைதியில்!
வாசனை நிறைத்து வண்ணக் கனவினில் மிதந்து
வசந்தத்தின் வாசலில் சுகந்தமாய் வீசிய நாட்கள்....
இன்று விழிகளை நனைக்கின்றன.
சீதனம் என்னும் சோதனைப் பாதையில்
வேதனை வந்தது.
என் வசந்தம் வெற்றிடம் ஆனது.
காகிதப் பூவாய் கல்லறைக்கும் உதவாமல் நான்1...






- பாரதி



# காலங்காலமாய்.........



காலங்காலமாய்க் காத்திருந்து நீ!
கண்டதென்ன சொல்வாய் தோழி!.....
காதலென்று கதை சொல்லி
கனவுகளை வளர்த்துவிட்டு
காசு நகை சீர் கேட்டு
கனவுகளைக் கருக்குகின்ற
கயமை நிறை மனிதரடி. இவரை
காறி உமிழ்ந்திடடி.



- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அதிசயமே!

மகிழ்ச்சியாகத் தலையசைத்து
நறுமணத்தைப் பரிசாய் எனக்களித்து
மழையைக் கண்டால் குளித்தெழுந்து
மணித்துளி கரைந்தால் கருக்கிழந்து
வண்ண நிறங்களில் உடையணிந்து
எண்ண முடியாத் தோழருடன்
ஒற்றைக் காலில் நர்த்தனமாடி
ஓடிவா! என்று எனை அழைத்து
மலர்ந்து மனதையும் மலரவைப்பதனால்
உனை...... மலர் என்றனரோ? மானிடரும்....






- பாரதி



# சிலுவை சுமந்தே



பரமபிதாவே பரிசுத்தம் ஆனவரே.
பாதம் பணிந்து ஸ்தோத்திரம் ஜெபிக்கும்
பாவப்பட்ட தமிழர்கள் நாங்கள்.
துன்பம் என்னும் சிலுவையைச் சுமந்தே
துவண்டு போனோம் தமிழர்கள் நாங்கள்.
எங்கள் தமிழ் மண் வேண்டுமென்று
உங்கள் மனதைத் தட்டுகின்றோம்.
தமிழர் எம் சோகங்கள் கேளுங்கள்.
தயவுடன் கருணை புரியுங்கள்.




- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# புத்தாண்டே.



மலரப் போகும் புத்தாண்டே - தமிழர்..
மனத்துயர் தீர்க்க மலர்வாயா?
பிறக்கப் போகும் புத்தாண்டே - நாங்கள்
பிறந்த மண் ஆண்டிட அருள்வாயா?
உதிக்கப் போகும் புத்தாண்டே - தமிழை
உலகம் போற்றச் செய்வாயா?
சிறக்கப் போகும் புத்தாண்டே - தமிழர்
சிரித்து வாழ வாழ்த்தாயா?



- பாரதி





# கலையாத கனவுகள்

விழிகள் விரிந்து வினாவைக் கோர்க்கும்.
மனுச மழையில் உன் மதிமுகம் தேடும்.
கரங்கள் இணைத்து கதைகள் பேசி
காலாற நடந்து மகிழ்ந்த பொழுதுகள்.
கனவாய்ப் போன கதையைக் கண்ணீர் சொல்லும்.
காற்றே இல்லா பூமியதில்
சுவாசத்துக்காய் திணறிப் போன ஒரு ஜந்தாய்.
உன் நினைவை மட்டும் நிறைத்துவிட்டு
தனியாய்ப் பிரிந்து ஏன் சென்றாய்?



- பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அந்த நாளும் வந்திடாதோ?

புகைப்படம் காட்டி உறவுகள் சொல்லி
வரைபடம் தேடி ஈழமண் காட்டி
திரைப்படம் போட்டுக் கரும்புலிக் காவியம் சொல்லி
மனப்பாடம் ஆக்கி மாவீரர் புகழ் பாடி
தாய்மண்ணின் உறவுக்காய்
பாலம்போட முயல்கின்றேன்
தமிழ்மொழியின் உயர்வுக்காய்
கோலமிட முனைகின்றேன்

பாட்டி வீட்டுக்குப் போவோமா?
எங்கள் நாட்டுக்குப் போவோமா?
மண்ணின் வாசனை நுகர்ந்து கேட்டிடும் என் மகள்
முகத்தைப்பார்த்துத் தவிக்கின்றேன்.
முடிவு சொல்லத் துடிக்கின்றேன்.
போர்ப்புயல் சூழ்ந்த எம்மண்ணில்
அமைதிக்காற்று வீசாதா?
அன்பு உறவுகள் அருகிருந்து
ஆனந்த மழையில் சிலிர்க்கின்ற
அந்த நாளும் வந்திடாதா?



- பாரதி



# உணர்வாயா பெண்ணே?

பெண்ணென்று உனை எண்ணி
பேதையாகக் குனியாதே!
அடுக்களைக்குள் அடைந்திருந்து
அவிந்து நீயும் எரியாதே!
உனக்குள்ளே சக்தி உண்டு.
உணர்வாயா பெண்ணே!

மகவாக்கி மனிதராக்கி
மானிடத்தை வளர்க்கின்றாய்!
மனங்களிலே அன்பு என்னும்
அமுதத்தை விதைக்கின்றாய்!
அவனியிலே பெண்களெல்லாம்
அரசாளும் காலமிது!
அடுப்படி தான் சொந்தமென்று
அவிந்து நீயும் எரியாதே!





- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# உனக்காய்



இதயம் உந்தன் பேரைச் சொன்னால்
இதழில் புன்னகை இதமாய் அமரும்
இரவுகள் எல்லாம் கனவுகள் சூழும்
இமைகள் கூட உனக்காய்த் தவிக்கும்

உந்தன் தோளில் உறங்கிட ஆசை
உனக்காய் வரங்கள் கேட்டிட ஆசை
எனக்காய் நீயும் அழுதிடும் கணங்களில்
ஏழு பிறப்பும் உனக்காய் பிறந்திட ஆசை



- பாரதி



# மனிதரெலாம்!



இலை உதிர்த்த மரங்களெல்லாம்
இளஞ்சிவப்புத் துளிரெடுக்க
பனி உறைந்த நதிகளெல்லாம்
பரவி எங்கும் புரண்டோட
மறைந்திருந்த செடிகளெலாம்
மண்ணைப் பிளந்துவர
மரகதப்பச்சைக் கம்பளம் விரித்த பூமி
மானிடரே! கேளீரோ!
இன்பதுன்பம் இயற்கையெனக்கூறும்!



- பாரதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# உன்னை மட்டுமா?



விழியோரத் துளி நீரும் கரைகின்றது
விதி வரைந்த கோலத்தை நினைக்கின்றது
இவள் வடிக்கின்ற கண்ணீரில்
வடிந்திடாதோ சோகமெல்லாம்
வருகின்ற காலமெல்லாம் வசந்த காலம் ஆகிடாதோ?

இருவிழி சிந்தும் பெருமழை பொங்கும்
இதயம் அரற்றும் இருளிடை தவிக்கும்
துன்பம் தொடுகையில் என் தோள்களை அணைத்திட
இன்பம் வருகையில் இதமாய் மகிழ்ந்திட
துவண்ட நிமிஷம் தொட்டு நிமிர்த்திட
துணையாய் நின்று தொடர்ந்தது நீதான்
நான் தொலைத்தது உன்னை மட்டுமா?
தொலை தூரமாய்ப் போன என்
சந்தோஷங்களையும் தான்.

- பாரதி





# தேசம் விடிய நேசம் காத்த உறவுகள்

உதிரத்தை நெய்யாக்கி உயிர்களைத் திரியாக்கி
சதுரத்தை நெருப்பாக்கி சரித்திரம் படைப்பவரே
மண்ணின் விடியலுக்காய் மகிழ்வோடு விதையாகி
தமிழர் கண்ணின் மணியானவரே காவிய வீரர்களே
புதைக்கப்படவில்லை நீங்கள் விதைக்கப்பட்டவர்கள்.
கரையவில்லை நீங்கள் ஈழ மண்ணில் கலந்தவர்கள்.

அணைத்த ஆயுதமும் அணிந்த நஞ்சு மாலைகளும்
துணையாய்த் தோழர் வர தொடர்ந்த களப்
போர்களுமாய்
தேசம் விடிவதற்காய் உங்கள் தேகம் ஈந்தவரே
நீங்கள்
தீயில் எரியவில்லை மண்ணில் தீபமானவர்கள். ஈழத்
தாயின் மலர்வுக்காய் மழையாய்எழுந்தவர்கள்
தமிழர் மனங்களிலே நீங்கள் மறையாத
தெய்வங்களே



பாரதி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



பாரதியின் கவிதைகள் நமது அன்றாட வாழ்வின் விம்பங்கள். நாம் வாழும் புலத்தின் மனப்புலம்பல்களுடன் இந்நாடுகளில் இருமுகங்களுடன் நாம் நடத்தும் வாழ்வின் அவலங்களின் வெளிப்பாடு இவரது கவிதைத்தொகுப்பு.

இவரது கவிதைகளில் கோபம் இருக்கும்! ஆனால் அவரிடம் நான் கோபத்தைக் கண்டதில்லை. கவிதைகளில் வேகமான வார்த்தைப் பிரயோகம் இருக்கும்! ஆனால் அவர் வேகமாகப் பேசியதைக் கண்டதில்லை. அவரது கவிதைகளில் அடிமைத்தனத்திற்கு எதிரான அழைப்பு இருக்கும்! ஆனால் வீட்டுக்குள் மருந்துக்குக் கூட அடிமையாய் இருந்த அநுபவம் அவருக்கில்லை.

**இ. சிறீரங்கன்**
பிரான்ஸ்

ISBN : 978-955-8913-73-4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்